6. அறிவிப்பு

பேரவை அலுவல்

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் எல்லாக் கட்சித் தலைவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, பேரவைக் கூட்டம் நாளை (4—3—1981) காலையிலும், மாலையிலும் நடைபெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வறட்சி நிலை அறிக்கை மீதான விவாதம் பிற்பகலிலும் தொடரும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (4—3—1981) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாக்கல்கள்.

இணைப்பு I.

தமிழ்நாட்டில் பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை குறித்த அறிக்கை. (தமிழ்)

[495ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக்காண்க.]

1980–81 ஆம் ஆண்டில் தென் மேற்கு, வடகிழக்குப் பருவ மழை பல இடங்களில் குறைவாகவே பெய்துள்ளது. வடஆற்காடு, புதுக்கோட்டை, தருமபுரி, தென்ஆற்காடு, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், மதுரை, செங்கற்பட்டு, பெரியார் மாவட்டங்கள் முழுமையாகவோ அல்லது பகுதிகளிலோ மழைக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளன. கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வேலை வாய்ப்புகள் குறைந்துள்ளன.

2. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்கு நிலைமையை விளக்கி தங்கள் அறிக்கைகளை அனுப்பி, தேவையான நிவாரணப் பணிகளுக்கு நிதி அனுமதியைக் கோரியிருந்தார்கள். அரசும் அவற்றை உடனடியாகப் பரிசீலித்து, ஆணைகளை அவ்வப் பொழுது வெளியிட்டுள்ளது. முக்கியமாக குடிநீர்த் தட்டுப் பாட்டைத் தீர்க்கும் பணி தலையாயப் பணியாகக் கருதப்பட்டது. புதிய ஆழ் கிணறுகள் தோண்டவும், ஏற்கனவே உள்ள